# இலங்கைத்தமிழரின் 'திரிசங்கு' நிலை!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம் | சென்னை: ஆவணி 30உ புதன் (15—9—54) வெளியூர்: ஆவணி 31உ வியாழன் (16—9—54) | மலர்: 2 இதழ்: 80

## 'வெளியேறத்தான் வேண்டும்!'

### கொத்தலாவலையின் பிடிவாதம்!

### 'ஏற்றுக்கொள்ளமாட்டோம்'

### தூதுவர் தேசாயின் திருவாக்கு!

### இந்திய—இலங்கைப் பிரச்சினை மாநாடு காணும் முடிவுகள்?

### ஒன்றரை லட்சம் திராவிடர்கள் நாடற்றவர் ஆக்கப்படும் அநீதி

"இலங்கையிலிருந்து அண்மையில் வெளியேற்றப்படவிருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை, காலாவதியாகிவிட்ட இலங்கையில் வசிப்பதற்கான அனுமதிச் சீட்டுள்ள 70,000 பேர் மட்டும் அல்ல; இந்திய 'பாஸ்போர்ட்' வைத்திருக்கிற 1,50,000 இந்தியர்களும் விரைவிலேயே இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்படுவர்."

இத்தகவலை வெளியிட்ட இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை, "இந்தியர்களை இலங்கையிலிருந்து திருப்பி அனுப்புகிறோம் என்றால், அதற்குக் காரணமெல்லாம், இந்தப் பிரச்சினை, இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையைப் பொறுத்ததாக இருப்பதினால்தான்," என்றும் குறிப்பிட்டார்.

"இலங்கையில் சுமார், 1,50,000 இந்திய 'பாஸ் போர்ட்' உடைய இந்தியர்கள் இருக்கிறார்கள்; அவர்களில் சுமார் 70,000 பேர் இலங்கையிலேயே தங்குவதற்கான அனுமதிச் சீட்டுப் பெற்றவர்கள்! இந்த 70,000 இந்தியரும் தங்குவதற்குப் பெற்றுள்ள அனுமதிச் சீட்டுகள், காலாவதியாகும்போது, மீண்டும் அவை புதுப்பிக்கப்பட்டாலன்றி, எந்தவித தாக்கமும் இன்றி இலங்கையிலிருந்து திரும்பிச் செல்ல[illegible]!

"இந்தப் பிரச்சினை, இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையாக இருப்பது அறிந்த ஒன்று, ஆகவே, [illegible] அனுமதிச் சீட்டு வைத்திருக்கிற இந்தியர்களுக்கு, [illegible] நாட்டில் இடமில்லை என்று நாங்கள் [illegible] திரும்பிச் செல்லுமாறு கேட்கிறோம் எனின், [illegible] உள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரம் இந்தியர்களும் [illegible] விட்டு வெளியேறத்தான் வேண்டும்; ஆனால், பல [illegible] வெளியேற்றப்படுமோ[illegible] ஏற்பாடுகள் செய்யப்படும்,"

—இவ்வாறு இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, இந்திய இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்காக, தான் கூட்டிய மாநாட்டைத் திறந்து வைக்கும்போது குறிப்பிட்டார்.

இலங்கை இந்தியர் பிரச்சினைகளை விவாதிக்கக் கூடிய அந்த மாநாட்டில் எந்தவித திட்டமான முடிவும் மேற்கொள்ளப் படாவிட்டாலும், இலங்கை எப்படியேனும் எல்லா 'இந்தியர்'களையும் திரும்ப அனுப்பிவிட கண்மையாக முயற்சிக்கிறது. என்பது மட்டும் மாநாட்டின் மூலம் தெரியவருகிறது.

திரும்பிச் செல்பவர்கள், தங்கள் சேமிப்புப் பணத்தையும், மூதலீட்டையும் எடுத்துச் செல்லும் வகையில் செலாவணிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறதாகக் கூறப்பட்டது,

மாநாட்டில் இந்திய சர்க்கார் சார்பில் இந்தியத் தூதவர் தேசாயும் கலந்து கொண்டார்.

இலங்கையின் முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகா, மற்றும் இலங்கை அரசாங்க உயர்தர அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்வது பற்றி, கொத்தலாவலை குறிப்பிட்டதாவது:—

"இலங்கையில் தங்குவதற்காகத் தரப்பட்ட அனுமதிச் சீட்டுக்கள் காலாவதி ஆகிய உடனேயே, அந்த அனுமதிச் சீட்டை உடையவர்கள் எல்லாம், இந்தியப் பிரஜைகள் ஆகிவிடுகின்றனர்; அவர்களை இந்தியத் தூதுவராலயம் இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்து, திரும்ப தங்கள் நாட்டிற்கு அழைத்துக் கொள்ள வேண்டும்," என்றார்.

இதற்கு, இந்தியத் தூதவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## தெ. கி. ஆசியப் பாதுகாப்பு

### வட்டமேஜை மாநாடு கூட்டுவதற்கு யோசனை!

தென் கிழக்கு ஆசியாவின் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு வட்டமேஜை மாநாடு கூட்டலாம் என்று பர்மியப் பிரதமர் தாக்கின்-நு யோசனை கூறினார்.

இத்தகைய மாநாட்டிற்குப் பர்மானை அழைத்தால் கலந்துகொள்ளத் தயார் என்றும் அவர் கூறினார்.

வல்லரசு கோஷ்டிகள், 'முறைப்பை'த் தளர்த்திக் கொண்டு, பரஸ்பரம் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று அவர் சொன்னார்.

உத்தேச வட்டமேஜை மாநாட்டில், எதிர் முகாம்களைச் சேர்ந்தவர்கள் சமரச மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தாணு-கிருபளானி சந்திப்பு

புதுடில்லி, செப். 14—

திரு—கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணு பிள்ளை பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் கிருபளானியைச் சந்தித்துப் பேசினார்.

தமிழர்கள்மீது திரு-கொச்சி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர், பட்டம் தாணு, இப்போதுதான் முதல் தடவையாக கிருபளானியைச் சந்திக்கிறார்.

பண்டித நேருவையும், பட்டம் தாணு சந்திப்பார் என்று தெரிகிறது.

தமிழர்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதைக் கண்டித்து பி.-சோ. கட்சித் தலைமையினர் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது பற்றி, பட்டம் தாணு, தன் கருத்தைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்; 'அது, கட்சி விவகாரம்,' என்று மட்டிலும் சொன்னார்.

'சம்பந்தப்பட்ட கட்சிக்கிளைக்கு அனுப்புமுன் தீர்மானம் பிரசுரிக்கப்பட்டிருக்கக் கூடாது,' என்றார்.

## இந்திய மக்கள் தொகை

### ஏறக்குறைய 38 கோடி!

இந்தியாவின் மக்கள் தொகை 1954-ம் ஆண்டு மத்தியப் பகுதியில் 37 கோடி 67½ லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது!

இச்செய்தியை, எழுத்துமூலம், துதவி உள்நாட்டு அமைச்சர் தஞ்ச்தேவ் இந்திய மேல் சபையில் கூறினார்.

## அரங்கண்ணல்-ஆண்டாள் திருமணம்

★

9—9—54 வியாழக்கிழமை காலை, விருத்தாசலம் கோட்டை வெளி வீதி, 6-எண்ணுள்ள இல்லத்தில், 'திராவிட நாடு' துணை ஆசிரியர் தோழர் இராம-அரங்கண்ணல் அவர்கட்கும் தோழியர் ஆண்டாள் அம்மையார் அவர்கட்கும் சிதம்பரம்—மாவட்ட ஆவணப் பதிவாளர் முன்னிலையில் பதிவுத் திருமணம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

★

## ஈரானில் எண்ணற்ற கம்யூனிஸ்டுகள் கைது!

### ஷாவின் உறவினரும் உள்ளனர்!

தெஹ்ரான், செப். 14—

கம்யூனிஸ்டு உளவாளிகள் என்ற பெயரில் எண்ணற்ற இராணுவ அதிகாரிகளும், நிர்வாகத் துறை அதிகாரிகளும், தொழில் துறை நிபுணர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஈரானிய இராணுவக் காரியாலயம் செய்தி அறிவிக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் ஈரான் மன்னரான ஷாவின் தூர உறவினர்கள்கூட உள்ளனராம்!

இதுவரை 133 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாயும், உலகத்திலேயே மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமான அபடான், சிதைக்கப்படுவதற்காக சதி ஏதும் நடத்தப்பட்டது என்று

## ஆஜ்மீர் சபாநாயகர் விலகுகிறார்!

அஜ்மீர், செப் 14—

அஜ்மீர் சட்டசபைத் தலைவரான சௌத்ரி பகிரத் சிங், காங்கிரஸ் தலைவர் மண்டிதரின் போக்கினைக் கண்டித்து தனது பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது.

அவர், தனது விலகல் கடிதத்தை நேரிலேயே முதன் மந்திரியிடம் தந்து, கடிதத்தை சட்டசபை காங்கிரஸ் கட்சியினரின் முன்வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளாராம்.

விசாரணையின்போது எவ்வித விவரமும் வெளியாகவில்லை என்றும் இராணுவக் காரியாலயம் தெரிவிக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ள அதிகாரிகளில் பலர் குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரியிருக்கிறார்களாம்.

★

★

டாக்டர் ஸ்ரீசாலாட்சி-நெடுஞ்செழியன், M.B.B.S., M.A.H., D.M.C.H., அவர்கள், வைத்திய மேல் படிப்பிற்காக அமெரிக்கா சென்று, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 10—9—54 அன்று வந்திறங்குகையில் வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—9—54 புதன்

# அவர்களால் முடிந்தது!

"திருமணமாகும் தம்பதிகள் தக்க வயதுடையோராய் இருக்கவேண்டும்;

"ஒருவரை யொருவர் நன்கு அறிந்து கொண்டிருக்க வேண்டும்;

"இரண்டு பேரும் எந்தவித மான வியாதிகளாலும்பிடிக் கப்பட்டிருக்கக் கூடாது!

"நல்ல தேகக் கட்டோடு, மனோ வலிமையும் பெற்ற வர்களாக இருக்க வேண்டும்!,"

இப்படியெல்லாம், யாரோ கழகத்தான் கூறினான் என்று எண்ணிவிடாதீர்கள்!

இவ்வளவு நல்ல அறிவுரைகளை யார் கூறியிருக்க முடியும் என்று யோசிக்கிறீர்களா? அதிக சிரமப்படவேண்டாம்; நம்மை ஆளப்புறப்பட்டிருக்கும் டெல்லி சட்ட சபை அங்கத்தினர்கள், சென்ற வாரத்திலே, திருமண மசோதாவின் மேலில் நடந்த விவாதத்தின்போது பேசியவை களில் சில இவை!

இவ்வளவு நல்ல விஷயங்களை, அந்தப் பிற்போக்குவாதிகளா பேசினர், என்று சந்தோஷப்பட்டு விடாதீர்கள்; அதற்கும் காரணம் இருக்கிறது!

"எனக்கு முழு சம்மதம்தான், அவளை காலேஜ் படிக்க வைக்க; ஆனால் படிக்க வைப்பதற்கு முன் செய்யவேண்டியதையும் செய்யத்தானே வேண்டும்? முன்பாவது சிறு பிள்ளை; இப்பொழுது நாலு பேர் பார்த்தால் என்ன நினைத்துக்கொள்வார்கள்? கழுத்தில் ஒன்றுமில்லை; வைரத்தோடு கண்ணாடி வளையல்; காதிற்கு மாற்றுத் தோடு இல்லை; இப்படியே நாலு பேருக்கு முன்னாடி பெண்ணை அனுப்பறது நல்லாயிருக்குமா வென்று யோசித்துப் பாருங்கோ!"

என்று; பெண்ணை கல்லூரிக்கு அனுப்ப ஆயிரக்கணக்கில் செலவு சொல்லும் அம்மையைப் பற்றி என்ன எண்ணுவது?

தனக்கு விருப்பமில்லாத காரியத்தைச் செய்வது அவளால் பொறுக்க முடியாத விஷயம்; ஆனாலும், ஜாதகதோஷம் இருக்கும் பையனை எதிர்க்கவும் மனமில்லை; ஆகவேதான், அதுப்பமைப்பை ஒத்துக்கொண்டான்; கடைமுறை எவ்வளவு கடினம் என்று விளக்கினான்!

அம்மையின் தடையைக் கண்டு பயந்த தந்தை, மகளுக்குக் கல்லூரிப் படிப்பே வேண்டியதில்லை என்று முடிவு செய்தார்!

அதுபோல இன்றைக்கு சட்ட சபைக்குள் இருக்கும் தேசிய உறுப்பினர்களுக்கு நாட்டின் சீர்திருத்தத்திலே நம்பிக்கை கிடையாது!

இந்த மகா சபை, ராம் ராஜ்ய பரிஷத் முதலிய பிற்போக்குக் கட்சிகளின் உறுப்பினர்களும் காங்கிரஸ் உறுப்பினர்களுடன் சேர்ந்துகொண்டு இந்து மதத்தைக் காப்பதிலும், இந்து சமுதாய சம்பிரதாயங்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகின்றனர்!

வெள்ளையன் சென்ற பின் கிடைத்திருக்கும் அதிகாரம், இந்த அரிய விஷயத்தைச் செய்யப் பயன்பட வேண்டுமென்றுதான், இந்த ராஜ்யத்தை, 'ராம ராஜ்யம்' என்று அழைக்கின்றனர்!

இந்த 'ராம ராஜ்ய' தத்துவம்தான், காங்கிரசின் சமுதாயக் கொள்கைகளை நிர்ணயிக்கிறது!

இந்து மத வழியில் முழு நம்பிக்கை — இல்லை — பக்தி இருக்கிற காரணத்தினால் தான், மனிதனுக்கு மனிதன் குல பேதம் கூறும் மிகவும் பிற்போக்கான இந்து சட்டத்தைச் சீர்திருத்த, சட்ட சபையில் உட்கார்ந்தவர்கள் அனுமதிக்கவில்லை; ஐந்தாண்டுகள் யோசித்தும், முடியாமல், அம்பேத்கார் விலக நேரிட்டது!

இந்து சட்ட சீர்திருத்த மசோதா மிகவும் சாதாரணமான சீர்திருத்தங்களையே கொண்டிருந்தது; ஆணும், பெண்ணும் வேற்றுமையற்ற நிலையுடன், ஜாதி மதங்களைக் கடந்து, எல்லோருக்கும் சரி சமமான உரிமையும் சொத்தில் பங்கும், விவாக ரத்து உரிமையும், திருமணத்தில் ஜாதி வித்தியாசம் தடையில்லை என்ற நிலையும் கொண்டுவர முயன்றது, அம்பேத்கார் கொண்டுவந்த இந்து சட்ட சீர்திருத்த மசோதா,

அந்த மசோதாவை எப்படி எப்படி தட்டிக்கழித்து, எவ்வளவு காலங்கள் நீடிக்க வைக்க முடியுமோ அவ்வளவு காலங்கள் ஒத்திப்போட்டு, கடைசியாக, 'இது நிறைவேறாது' என்று உணர்ந்து அம்பேத்காரே ஓய்வு ஆவ வுக்கு பிற்போக்கினர் நடந்து கொண்டனர்!

நமக்கு மிகச் சாதாரணமாகத் தோன்றும் இம்மசோதாவை எதிர்த்து வட இந்தியாவில் பெரும் பிரச்சாரம் நடந்தது; டெல்லி சட்ட சபைமுன் மறியல் நடந்தது; உறுப்பினர்களின் உண்ணாவிரதமும் நடைபெற்றது!

இப்படியெல்லாம் செய்து அந்த மசோதாவை ஒழித்துக் கட்டிய பின்னர்தான், திருப்தியடைந்தனர், வடநாட்டினர்!

'இந்து சட்ட சீர்திருத்த மசோதா யோசனையும், அதன் கருத்துக்கள் அடங்கிய சட்டங்களை மூன்று மசோதாக்களாகக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறேன்,' என்று மார் தட்டினார் பண்டிதர்!

அதன் தொடர்புதான் சென்ற வாரம் விவாதிக்கப்பட்ட விசேஷ திருமண மசோதா!

சென்ற பார்லிமெண்டு கூட்டத்தில் சொத்துரிமை மசோதா விவாதிக்கப்பட்டு, மநுவையும் வெட்டிக்குழி தூக்க விட்டுக்கட்டிருக்கிறது!

இப்பொழுது விவாதிக்கப்படும் திருமண மசோதாவில் எவ்வளவு அனுவசியமான விவாதங்கள்! அப்பப்பா, எழுதவே வெட்கமாயிருக்கிறது!

இந்த சமுதாய அஸ்திவாரத்தையே இம்மசோதா கெடுத்துவிடும்-என்று கூறும் மக்கள் பிரதிநிதிகள் ஏராளமாக இருக்கின்றனர்!

யார் இந்த சமூகத்தைக் கெடுத்துவிடுவர்? விரும்பி ஒன்று கூடும் தம்பதிகளா?

'ஆம்!'—என்கின்றனர், வடநாட்டு இந்து பாதுகாவலர்கள்!

ஆகவேதான், அர்த்தமற்ற திருத்தங்களையும், நேர்மையற்ற திருத்தங்களையும் இந்த மசோதாவுக்குக் கொண்டு வருகின்றனர்!

இந்து சம்பிரதாயப்படி எத்தனை பிற்போக்கான முறையில் திருமணம் நடக்கிறது என்பதுதான் நமக்குத் தெரிந்த விஷயமாயிற்றே!

ஜாதகத்தையும், ஜக்கம் சொத்தையும் பார்த்து, பெண்ணைவிட, அவளுக்கும் மேடும் நகையை எடை போட்டுவிட்டு, பையனுக்குக் கொஞ்சங்கூட பொருத்தமில்லாத பெண்ணைக் கட்டித் திருமணம் செய்வது என்பது இந்த நாட்டு வழக்கம்!

குறுகிய நோக்கம் கொண்ட பெற்றோர்களால் வாழ்விழந்து, ஏமாளிகளாகப் போன வாலிபர்கள், கோடிக்கணக்கில் உண்டு, இந்நாட்டில்!

இந்த நிலையில், 'வாலிபன், அவனுக்கு இஷ்டப்பட்டவளை மணந்துகொள்ளவும்-அது சட்டபூர்வமாகச்செல்லுபடியாகும்,' என்றால், அப்பொழுதுதான், மிக முற்போக்கு வாதிகள் போல, வயதை நிர்ணயித்தாயா? என்கின்றனர், சிலர்!

சாரதா சட்டம் வரும்போது, 'திருமண வயதை குறை; அதுதான் பாரத தேசத்திற்குகந்தது,' என்று விஞ்ஞான ரீதியாகப் பேசுவது போல, இக்குமதக் கோட்பாட்டிற்கு ஆதரவு தேடினர்; இந்த அக்கிரகார வாசிகள்!

அதே உறுப்பினர்கள் திருமண மசோதா வரும்போது, 'வயதை அதிகப்படுத்து; இல்லையேல், பையனும்—பெண்ணும் பரிபக்குவம் பெற்றிருக்க மாட்டார்கள்,' என்று வாட்டு வாதம் பேசுவர்!

இந்த ஆசாமிகள், ஜாதகக் கட்டைத் தூக்கிக்கொண்டு, ஊர் சுற்றி, மாப்பிள்ளையைப் பிடி—பெண்ணையும் நிச்சயிக்கும்போது, எத்தனை தடவை பெண்ணும், மாப்பிள்ளையும் பரிபக்குவம் அடைந்திருக்கின்றனரா,' என்று பார்த்திருக்கின்றனர்?

ஏதோ வாய்க்கு வராத வடமொழியில், இரண்டு ஸ்லோகத்தை உளறிவிட்டு, தனக்கு லாபம் தரும் திருமணங்களை நடத்தும் இவர்கள் கூறுகின்றனர், 'மணமக்களுக்கும் பரிபக்குவம் தேவை,' என்று!

புது மணம் புரியும் தம்பதிகள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவராய், உடல் நலமுற்றவராய் இருக்க வேண்டுமென்பதில் யாரும் மாறுபட்ட கருத்துக் கூறவில்லை; ஆனால் புது மணத் தம்பதிகளைப்பற்றி இந்த ராம ராஜ்ய வாசிகளுக்கு எப்பொழுதிலிருந்து இவ்வளவு அக்கரை வந்தது? இதே அக்கரையை அவர்கள் நடத்தும் இந்து சம்பிரதாய திருமணங்களில் ஏன் அனுஷ்டிப்பதில்லை?

இந்து திருமணத்தில், டாக்டர் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டுதான் நிச்சயதாம்பூலம் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று வைப்பதுதானே!

இங்கே மாத்திரம், புதிய சட்டத்தில், 'ரிஜிஸ்தர் திருமணம் செய்துகொள்ள விரும்புவர்களுக்கு, டாக்டர் சர்டிபிகேட் கொடுக்க வேண்டு' மென்று திருத்தம் கொண்டு வருகிறார்களே, ஏன்?

இது மாத்திரமில்லை; தீண்டாமை ஒழிப்பு மசோதா கொண்டுவந்தால், அதற்கும், நடைமுறைக்கு ஒத்துவராத சில திருத்தங்களைப் பிரேரேபிக்கின்றனர்.

இப்படி எந்த முன்னேற்ற மசோதாவுக்கும் முட்டுக்கட்டை போடும் திருத்தங்களும், சர்க்கரை போல பேசுவதும், வடநாட்டு பார்லிமெண்டு அங்கத்தினர்களின் வழக்கமாகி விட்டது!

எதையாவது பேசி, எவ்வளவு கஷ்டமான தடைகளை உண்டாக்கலாமோ அவ்வளவையும் செய்து, முன்னேற்றமான வழியில் நாடு செல்ல முடியாதவாறு தடை செய்வதுதான் அவர்கள் வழக்கமாகப் போய்விட்டது!

காங்கிரஸ், இந்தப் பிற்போக்கு வாதிகளின் கூடாரமாகப் போனதால் ஏற்பட்ட பலன் என்ன தெரியுமா?

50 பிரிவுகள் கொண்ட திருமண மசோதாவை 37-மணி நேரத்தில் விவாதிக்க திட்டமிட்டிருந்தனர், சர்க்கார். உறுப்பினர்களின் அர்த்தமற்ற விவாதத்தால், 17½-மணி நேரம் விவாதித்த பின், ஆறு பிரிவுகள்கூட நிறைவேற வில்லையாம்!

ஒரு நாளைக்கு பார்லிமெண்டு கூடிக் கலைய நான்கு லக்ஷம் ரூபாய்க்குமேல் செலவாகிறது!

முன்னேற்றகரமான மசோதா நிறைவேறக் கூடாது என்ற நோக்கத்துடன், இப்படி 17½ மணி நேரம் ஆறு பிரிவுகளை விவாதித்து, நகைப்பிற்கிடமான திருத்தங்களைச் செய்துகொண்டிருந்தால், நம்மை ஆளவந்தார்களைப் பற்றி என்ன கூறுவது? அவர்களின் கடமை மறந்த நிலையை விவரிப்பதா? காங்கிரசை, வடநாட்டு வைதிகம் ஆட்கொண்டதற்கு உதாரணமென்பதா? அல்லது, ஒன்றுபட்ட இந்தியாவில் சமுதாய சீர்திருத்தம் செய்துவிடலாம் என்று எண்ணும் தேசியத் தோழர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதா?

ரிஜிஸ்தர் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும், இப்பொழுதிருக்கும் இந்து சட்டம் நாளடைவில் உடைபட வழி ஏற்படுகிறது!

ஜாதி விட்டு ஜாதி திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு சொத்துரிமையும், வாரிசு உரிமையும் போய்விடுகிறது—என்ற நிலை மாறி, கலப்பு மணங்கள் அவர்களுடைய பிற்கால வாழ்வைப் பாதிக்காது என்ற நிலை ஏற்படுகிறது!

இதை உணர்ந்த வைதிகர்கள், இம்மாதிரி மசோதாக்கள் வராதவாறு தடை செய்ய முயற்சித்தனர். நாட்டிலே மக்கள் மனதில் ஏற்படும் எண்ணப் புரட்சியைக் கண்டு அச்சங் கொண்ட நேரு சர்க்கார், வேறு வழியின்றி இம்மசோதாவைக் கொண்டுவந்தவுடன் அதை, மக்கள் பின்பற்ற முடியாதவாறு எவ்வளவு கடினமான திருத்தங்கள் செய்யலாமோ, அவ்வளவையும் இப்போது செய்கின்றனர், இந்த மத வெறியர்கள்!

பாவம்! அவர்களால் முடிந்தது அவ்வளவுதான்! நாட்டிலே சென்று நாரதர் கூறியதையும், யக்ஞவல்கியர் வகுத்த முறையையும் இனி கூற முடியாது! ஆகவேதான், அவர்களால் முடிந்த சில சட்ட திருத்தங்களைக் கொண்டுவருகின்றனர்.

ஆனால், வருங்காலத்தில், சட்டங்களை உடைக்கும்போது இந்தத் திருத்தங்களைப் பற்றி நினைப்பவர் எவருமிருக்கமாட்டார்கள்!

## தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

தூத்துக்குடி, செப். 11—

அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. கே. என். ராதாகிருஷ்ண முதலியார் முன்பு, நடைபெற்று வரும் தூத்துக்குடி சதி வழக்கில் மேலும் பிராசிக்யூஷன் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

ஜெஜுலாப்தீன் என்ற, வேறு, மூக்குக் கண்ணாடி வியாபாரி தனது சாட்சியத்தில் கூறியதாவது:—

"சென்ற வருடம் ஜூலை 15-ந் தேதி பிற்பகலில் ஒரு டைம்பீஸ் கடிகாரத்தைச் சரி செய்து கொடுக்க வேண்டுமென்று ஆத்திமுத்து என்னிடம் கொடுத்தார்; அதை சில தினங்கள் கழித்து திருப்பி எடுத்துச் செல்லும்படி நான் சொன்னேன்; ஆனால், ஆத்திமுத்துவும் டைம்பீசை வாங்கிப் போகவில்லை; சுமார் ஒரு வாரம் சென்ற பின், என் வீட்டிற்கு ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் வந்து சப்-இன்ஸ்பெக்டரிடம் கூட்டிச் சென்றார்; அப்போது சப்-இன்ஸ்பெக்டர் கிரேட் காட்டன் ரோடில் என்னுடைய கடைக்கருகில் இருந்தார்; அவர் என்னிடம் டைம்பீசைப் பற்றி விசாரித்து, பின்னர், என்னிடமிருந்து வாங்கிக் கொண்டார்; சப்-இன்ஸ்பெக்டர் எழுதிய ஒரு அத்தாட்சியில் நான் கையெழுத்திட்டேன்."

சாட்சி, 38-வது எதிரி ஆத்திமுத்துவை அடையாளம் காட்டி, தன்னிடம் டைம்பீசை ரிப்பேர் செய்யக் கொடுத்தவர், அவர் தான் என்று கூறினார்.

பின்னர், தூத்துக்குடி சர்க்கார் ஆஸ்பத்திரி டாக்டர் திரு. பி. நாராயணசாமி விசாரிக்கப்பட்டார். அவர் தம் சாட்சியத்தில் கூறியதாவது:—

"சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதி ஆயுதம் போலீசைச் சேர்ந்த குட்டி கிருஷ்ண நாயருக்கு வலது காலில் இருந்த காயத்திற்கு சிகிச்சை செய்தேன்; காயம் கல் அடிபட்டதால் ஏற்பட்டதென்று தெரிந்தது; கந்தசாமி என்ற போலீஸ்காரருக்கும் காலில் ஏற்பட்டிருந்த காயத்தைப் பரிசோதனை செய்தேன்; மலபார் ஸ்பெஷல் போலீசைச் சேர்ந்த பலகாரு டையவருக்கு காலில் ஏற்பட்டிருந்த காயத்தையும் பரிசோதித்தேன்; இரண்டு கைகளிலும் வெட்டுக் காயங்களடைந்த சங்கரநாராயணனையும் பரிசோதித்தேன்; போலீசார் அனுப்பிவைத்த விஜயராஜன், திருமால், வெங்கடாசலம் ஆகியோரையும் பரிசோதனை செய்தேன்; அப்பாக்குப் பிரயோகத்தால் காயமடைந்த 16 பேர்களைப் போலீசார் ஆஸ்பத்திரிக்குக் கூட்டி வந்தனர்; இறந்துபோன மூன்று பேர்களுடைய உடல்களும் கொண்டுவரப்பட்டன; மேலும் ஒருவர் அபாயகரமான நிலையில் கொண்டு வரப்பட்டு, ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார்."

# உறவு கொள்ள உரிய காலம்!

## ரஷ்யா தயாராக இருப்பதாகத் தகவல்

"சோவியத் ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளிடையே ராஜீய உறவுகள் நிலவுவதற்கான காலம் நெருங்கிவிட்டது; ஜப்பானும் தயாராக இருக்கும் பட்சத்தில் அத்தகைய ராஜீய உறவுகளை நிலைநாட்டிக்கொள்ள ரஷ்யா தயாராகவே இருக்கிறது. மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள், ஒன்றாக வாழ முடியும் என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருப்பதுதான் ரஷ்யக் கொள்கையின் அடிப்படை,"

—என்று சோவியத் வெளிநாட்டு மந்திரி மாலடோவ், 'சூ நிப்பன் கும்பன்' என்ற ஜப்பான் பத்திரிகை ஆசிரியர் பானமிட்சாவ் சட்டு என்பவர் கேட்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

"நம் இரு நாடுகளிடையே யும் இயற்கையான உறவுகள் ஏற்படாமல் தடுக்கும் தடைகள் என்ன?" என்று, அந்த ஜப்பான் ஆசிரியர் கேள்வி கேட்டிருந்தார்.

"நம் இரு நாடுகளிடையே யும் மீண்டும் அந்த உறவுகள் ஏற்படாமலிருப்பதற்குக் காரணம், ஜப்பான் நாட்டை ஒரு சார்புடைய நாடாக ஆக்க முயற்சிக்கிற அமெரிக்க ஆளும் வட்டாரத்தின் வார்த்தைகளை, ஜப்பானில் உள்ள ஆள்பவர்களின் ஒரு பிரிவினர் பின்பற்றுகிறார்கள் என்பதுதான். இயற்கையிலேயே ஜப்பான், நீண்ட காலத்துக்கு அந்த நிலையிலேயே இருக்க முடியாது,"

என்றும் மாலடோவ் குறிப்பிட்டார்.

"ஜப்பான்—ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள வர்த்தகத்தை அதிகரிக்க என்ன திட்டமான முறைகளை மேற்கொள்ளலாம்?" என்று கேட்கப்பட்டபோது, மாலடோவ் கூறியதாவது:—

"பரஸ்பரம் ஒருவருக்கொருவர் முன்னேற்றமான முறையில் வர்த்தக உறவுகளை வளர்த்துக்கொள்வதே ரஷ்யாவின் கொள்கை," என்றார்.

"ஜப்பானின் தற்காப்பிற்காக, இராணுவம் வைத்துக்கொள்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

என்றுகேட்கப்பட்டபோது மாலடோவ் விளக்கம் தருகையில் குறிப்பிட்டதாவது:—

"இராணுவ பலம் எல்லா நாடுகளிலும் குறைக்கப்பட வேண்டும் என்றும், குறிப்பாக, நிபந்தனை ஏதுமின்றி அணு ஆயுதங்களும், நீர்வளிக் குண்டுகளும் தடை செய்யப்பட வேண்டும் என்றும் ரஷ்யா கருதுகிறது."

"அதே நேரத்தில் எல்லா சுதந்திர நாடுகளும் தங்களின் தற்காப்பிற்காக இராணுவம் வைத்துக்கொள்ளலாமென்றும் கருதுகிறது."

"சுதந்திர, சமாதான, ஜனநாயக ஜப்பான், தேவையான இராணுவத்தை தற்காப்பிற்காக வைத்துக்கொள்வதை, ஜப்பானிய—ரஷ்ய சமாதான உடன்படிக்கைக்கான திட்டங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன,"

## மதுரை தி. மா. மு. க.

15—8—54ல் தோழர் தேவிநாதன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: கு. கிருஷ்ணன் (இந்திரஜித்து); துணைச் செயலாளர்கள்: அ சீதாராமன் ராசன், பாலன்; பொருளாளர். தேவிநாதன். பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## தெஹ்ரானில் அதிகாரி தற்கொலை

தெஹ்ரானில் இதுவரை 450-இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், 100 பேர் தேடப்படுகிறார்கள் என்றும் தெரிகிறது.

இராணுவ கவர்னரின் காரியாலயத்திலிருந்து கம்யூனிஸ்டுகளுக்கு செய்தி அனுப்பியதாக மூன்று அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஒற்றர்கள் குழுவைச் சேர்ந்த மேஜர் ஜவாத் டஹ்ராமி என்பவர் போலீசார் தனது வீட்டிற்குள் நுழைவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்னர் தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோனார் என்று தெரிகிறது. அவர் விட்டுச் சென்ற சீட்டை கடிதம் ஒன்றிலிருந்து இன்னும் பலர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

## இந்தியரைக் கொன்றவருக்கு தூக்கு தண்டனை

டர்பன், செப். 10—

பிலமென் மபிலாலா என்பவர், வயது முதிர்ந்த இந்தியர் ஒருவரை, ஒரு கொள்ளைச் சம்பவத்தின்போது கொலை செய்த குற்றத்திற்காக, இங்குள்ள உயர்நீதி மன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டார்.

1936-ம் ஆண்டிலும் இதே மனிதர் ஒரு இந்தியப் பெண்மணியைக் கொன்ற குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்; ஆனால் பின்னர், அந்தத் தண்டனை 12 ஆண்டு சிறைவாசமாக மாற்றப்பட்டது.

முன்பு மரண தண்டனையினின்றும் தப்பிவிட்ட அவர் மீண்டும் இப்போது தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்.

## திருக்குறள் மன்றம் திறப்பு விழா

5—9—54 மாலை மணப்பாறையில் திருக்குறள் மன்ற துவக்க விழா திரு. டி. மருதப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி வரவேற்புரையாற்றினார். திருக்குறளின் பெருமைபற்றி, திருச்சி மாவட்டத் தோழர் முத்துசாமி, திரு. அருளானந்தம் சாமியார் ஆகியோர் பேசினர். பின்னர், புதன்கிழமை தோறும் திருக்குறள் வகுப்பு நடத்துவதெனவும், குறட்பாக்களை நன்கு ஒப்புவிக்கும் சிறார்களுக்குப் பரிசு வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

# தென்னார்க்காடு மாவட்ட (ஜில்லா போர்டு) தேர்தல்

## உழவர் கட்சி அபேட்சகர்கள்

நடைபெற்று வரும் ஜில்லா போர்டு தேர்தலில், தென்னார்க்காடு மாவட்டத்தில், உழவர் கட்சியின் சார்பில் போட்டியிடுபவர்கள், காங்கிரஸ் கட்சியினரையும், காங்கிரஸ் – உழைப்பாளர் கட்சி கூட்டு அபேட்சகர்களையும் எதிர்த்துப் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

**செஞ்சி தாலூகா:**

1. சம்பராய கவுண்டர்—செஞ்சி
2. தங்கவேல் கவுண்டர்—சத்தியமங்கலம்
3. புருஷோத்தம கவுண்டர்—மேல்மலையனூர்
4. எம் சின்னத்தம்பி கவுண்டர்—சாத்தம்பாடி
5. அண்ணாமலை—மேல்மலக்கூர்

**திண்டிவனம் தாலூகா:**

1. வரதராஜ கவுண்டர்—திண்டிவனம்
2. ஏழுமலை கவுண்டர்—வடசிறுவலூர்-ஓலக்கூர்
3. எம். கே. ராமமூர்த்தி எம். ஏ—வானூர் - கிளியனூர்
4. சுப்ரமணியம் ,,
5. ஆர். நடேச கவுண்டர்—மரக்காணம்
6. மாயகிருஷ்ணன்—மைலம்

**கள்ளக்குறிச்சி தாலூகா**

1. தேசிங்கு—கள்ளக்குறிச்சி
2. அலமேலம்மாள்—சங்கராபுரம்
3. செங்கோடன்—வடக்கநந்தல்
4. குழந்தை மூப்பனார்—சின்னசேலம்
5. திராவிடமணி—பாக்கம் ரிஷிவந்தியம்

**விருத்தாசலம் தாலூகா**

1. ஜி. வீராசாமி படையாச்சி—விருத்தாசலம்—கம்மாபுரம்
2. சாம்பசிவம்—ஓமங்கலம்
3. சம்பந்தன் — திட்டாகுடி—பெண்ணாடம்
4. முத்தகவுண்டர்—நல்லூர்

**விழுப்புரம் தாலூகா**

1. ஆர். ராமச்சந்திரன் — விழுப்புரம்—விக்கிரவாண்டி
2. ஏ கோவிந்தசாமி, எம் எல் ஏ., கண்டமங்கலம்—கஞ்சனூர்

**திருக்கோவிலூர் தாலூகா**

1. ராமானுஜ உடையார்—இளவனசூர்

**கடலூர் தாலூகா**

1. நாராயணசாமி படையாச்சி—கடம்புலியூர்
2. ஜயராமன்—குறிஞ்சிப்பாடி

**சிதம்பரம் தாலூகா**

நடராஜ முதலியார்—பரங்கிப்பேட்டை

## நடிகவேள் நாடக மன்றம்

பாபநாசம், செப். 13—

இவ்வூர் ராயல் தியேட்டரில், நடிகர் எம். ஆர். ராமச்சந்திரன் தலைமையில் 'வைரக்கல்' நாடகம் நடைபெற்றது.

தோழர் எம். ஜி. ஆர். பேசுகையில், நடிகர்களைப் பிரித்துக் காட்டும் மனப்போக்கைத் தாம் கண்டிப்பதாகக் குறிப்பிட்டார்.

## தி. மு. க. கலா நிகழ்ச்சி

திருவிடமருதூர், செப் 14—

9—9—54 இரவு 7 மணிக்கு தோழர் என். வேலு தலைமையில், டி. ஏ. ராமசாமி குழுவினரின் கலா நிகழ்ச்சி நடைபெற்றது தோழர்கள் டி. ஏ. ராமசாமி, என். பிட்டப்பா, சௌந்தரம், ராமச்சந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## அனுதாபம்

சென்னை 1-வது வட்ட கழக உறுப்பினர் தோழர் அ கோவிந்தசாமி அவர்களின் சகோதரி கோகிலம்மையாரின் மறைவு குறித்து கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# திருமணங்கள்

★

சென்னை தங்கசாலை தெரு, எண் 148 வசந்த மண்டபத்தில், 12—9—54 காலை 10 மணிக்கு தோழர் டி. சண்முகம் எம் எல் ஏ. தலைமையில், தோழர் பி ஆர். துரைராசன்—தோழியர் சாவித்திரி வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சியை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் நடத்திவைத்து, சீர்திருத்த திருமணத்தின் நோக்கம் பற்றி விளக்கிப் பேசினார்:

### கலப்பு மணம்

தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள் தலைமையில், தோழர் ஆர். கணேசன் — தோழியர் ஜெகதாம்பாள் (ஆந்திர நாட்டுப் பெண்) கலப்புத் திருமண வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சியை பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நடத்தி வைத்தார் மணமக்கள் மலர் மாலை சூட்டிக் கொண்டனர். திருமணப் பதிவு அதிகாரியால் மேற்கண்ட இரு திருமண நிகழ்ச்சிகளும் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு, மணமக்கள், மன்றத்தில், உறுதி மொழிகளைப் படித்தார்கள். அதன் பிறகு தோழர்கள் அ பொன்னம்பலனார், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் மணமக்களை பாராட்டியும், வாழ்த்துரைகள் வழங்கியும், சுயமரியாதைத் திருமணத்தினால் பெண்கள் சமூகத்திற்கு ஏற்பட்ட நலன்களையும் விளக்கிப் பேசினர். தலைவர்கள் முடிவுரையுடன் நன்றி கூறப்பட்டு, சந்தனம், மலர் வழங்கி விருந்துகள் நடைபெற்றது. திருமணத்தில் மேளக் கச்சேரியும், மாலையில் தோழர் நாகூர் அனீபா இன்னிசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது

இத்திருமணங்களுக்கு உறவினர்கள், நண்பர்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். மணமக்களுக்கு பரிசுகளும், வாழ்த்து மடல்களும், வெள்ளிச் சாமான்களும் வழங்கப்பட்டன. மணமக்கள் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு 2 அன்புடன் வழங்கினார்கள்—பெற்றுக் கொண்டோம்—நன்றியுடையது — பொறுப்பாளர்.

*  *  *

**ஆ. கோவிந்தராஜன் — சரோஜா**

சென்னை சிந்தாதிரிப்பேட்டை, சின்னண்ண செட்டி தெரு, 51. எண்ணுள்ள கனகவேல் கட்டிடத்தில், 12—9—54 காலை 9-மணிக்கு, தோழர் சிவ. சண்முகம் தலைமையில், தோழர் ஆ கோவிந்தராசன் — தோழியர் சரோஜா அம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்கள் மலர்மாலை சூட்டி, தாலியும் கட்டிக்கொண்ட பிறகு:—தோழர்கள் என். வி நடராசன், கண்ணதாசன், தோழியர் அலமேலு—அப்பாதுரை, தோழர்கள் கா. அப்பாதுரை, அ. பொன்னம்பலனார், பொதுச்செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் மணமக்களை வாழ்த்திப் பாராட்டுரைகள் வழங்கினர். சுயமரியாதைக் கொள்கைகளைப் பின்பற்றி நடைபெறும் இத்தகைய திருமணங்களின் நோக்கங்களையும், அறிவுக்குப் பொருத்தமற்ற புரோகிதச் சடங்குகள்—வீண் செலவுகள்—ஆடம்பரங்கள் ஆகியவைகளைக் குறைக்க வேண்டியதின் அவசியத்தையும் விளக்கி விரிவுரையாற்றினர்; காதல் திருமணங்களைச் செய்துகொண்டு, அன்பும் அறிவும் ஒருங்கே அமைந்த நல் இல்வாழ்க்கையில் ஈடுபட முயலும் மணத் தம்பதிகட்கு உறவினர்கள், நண்பர்கள் சாட்சியம் அளித்து, வாழ்த்துகள் அளிக்கவேண்டியதற்கும் கொள்கை ஏற்ற முறையில் அறிவு வழி நின்று செயலாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டனர். பெண்கட்கு சமத்துவம், மணஉரிமை, சொத்துரிமை, மணவிலக்கு உரிமை ஆகியவைகள் சட்டமாக்கப்பட வேண்டிய அளவுக்கு அரசியலார் மனமாற்றம் அடைந்து வருவதைக் கண்டும், நம் கொள்கை மக்களாலும் அரசியலாராலும் ஆதரிக்கப்படுவது கண்டும் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினர்: இத்திருமண முறைகளை பெண் மக்கள் அதிகமாக ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

மணமக்கட்கு நண்பர்கள் மலர் மாலைகள் சூட்டி, பரிசுகள் வழங்கி, வாழ்த்துரை கூறினர். தலைவர் முடிவுரையுடனும், நன்றி கூறலுடனும் இத்திருமண நிகழ்ச்சி இனிது முடிவுற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு மணமக்கள் சார்பில் ரூ. 3 அன்புடன் உதவினர்—பெற்றுக் கொண்டோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

∴  ∴  ∴

**சின்னசாமி — கிருஷ்ணவேணி**

12—9—54 காலை 9 மணிக்கு, சென்னை பெரியமெட்டில், தோழர் சின்னச்சாமி — தோழியர் கிருஷ்ணவேணி திருமணம் தோழியர் பூங்கோதை தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்தம் கூறி, மலர் மாலை சூட்டிக்கொண்டார்கள். மணமக்களைப்பாராட்டி தோழர்கள் சைதை. சம்பந்தம், அ. ச. நடராசன் ஆகியவர்கள் வாழ்த்துரை கூறினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 மணமக்கள் சார்பில் அன்புடன் உதவினர்—பெற்றுக் கொண்டோம்— நன்றியுடையது— பொறுப்பாளர்.

★

9—9—54 காலை சேலம் நகரையடுத்த புத்துமாரியம்மன் கோவில் தெருவில், சி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற தோழர் பெருமாள்—தோழியர் ராமாயி வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

*  *  *

1—9—54 நகர் பழனியில் நடைபெற்ற தோழர் மு பி. கலைச்செல்வன் — தோழியர் பொன்னுமிர்தம் வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர.

*  *  *

சென்னை, இராயபுரத்தில் 12—9—54 காலை 7 மணி அளவில், தோழர் பி. சுப்பிரமணியம் தோழியர் சுசேலாவதி கலப்புத் திருமணம் தோழர் கா. மாணிக்கவாசகம் எம். சி., தலைமையில் நடைபெற்றது. தோழர் என். வி. மதியண்ணன் (திருக்கோட்டியூர்) சிறப்புரையாற்றினார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு 1 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

*  *  *

பேராவூரணியில் நடைபெற்ற தோழர் ஏ. கருப்பையா—தோழியர் சின்னப்பிள்ளை வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

•  •  •

30-8-54ல், திருசெங்கோட்டில், தோழர் கா. கா. லிங்கத்துக்கும்—தோழியர் கா. சரோசாவுக்கும் தோழர் என். இராசன் தலைமையில் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் முருகன், குடி. கலியப்பெருமாள், ஏ. ஈ இராமகிருட்டினன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

# ஒரிசாவில் பொருளாதார நெருக்கடி!

## வரட்சியினால் ரூ. 30 கோடி நஷ்டம் ஏற்படக்கூடுமாம்!

கட்டாக், செப். 11—

ஒரிசா மாநிலத்தில், பருவ நிலை வரட்சியின் காரணமாக தானிய விளைச்சல் பெருமளவு குறைந்துவிட்டதென்றும், ரூ. 30 கோடி வரை நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும் ஒரிசா நிதிமந்திரி குறிப்பிட்டுள்ளார். இது மாநிலத்தின் பொருளாதார நிலையை மிகவும் ஸ்தம்பிக்கச் செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரட்சியினால் ஏற்பட்டுள்ள இந்த நிலை, மொத்தம் எவ்வளவு தான் விளைச்சல் மகசூல் இருக்கும் என்பதைச் சொல்ல முடியாததாக இருக்கிறது; இன்று ஒரு நெருக்கடியான சூழ்நிலை உருவாகிறது என்றாலும், இவை எல்லாம், இனிமேலாவது சிறிதேனும் மழை பெய்யுமா என்பதைப் பொறுத்துத்தான் சொல்ல முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆண்டுதோறும் ஒரிசாவில் சுமார் 20 இலட்சம் டன் அரிசி கிடைக்கும். ஆனால், இந்த ஆண்டு இதில் 60 சதவிகிதமே கிடைக்கக்கூடும் என்று தெரிகிறது.

## இலங்கைத்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசாய், பதிலளித்ததாவது:—

"இலங்கை சர்க்காருக்கு, எப்படி, தங்கள் நாட்டுப் பிரஜைகள் யார் என்பதை நிர்ணயிக்கிற உரிமை இருக்கிறதோ, அதேபோன்று இந்திய சர்க்காருக்கும் இருக்கின்றது; இலங்கையரல்லாதவர் என்று கருதப்படும் எல்லோரையும் நாங்கள் இந்தியக் குடிமக்களாக ஏற்றுக்கொள்ள இயலாது," என்றார்.

"இலங்கைக் குடிமக்களாக வேண்டுமென பிரஜா உரிமை கோரியுள்ளவர்களின் மனுக்களை, டெல்லி ஒப்பந்தப்படி 2 ஆண்டுகளுக்குள் பைசல் செய்ய வேண்டுமென்றிருக்கிறது; ஆனால், அந்த மனுக்கள் குறிப்பிட்ட காலத்தில் பைசல் செய்யப்பட முடியாது,"

என்று, இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டார்.

மகாநாட்டில் கலந்து கொண்ட டட்லி சேனநாயகா, "இலங்கை அரசாங்கம் பிரஜா உரிமை மறுத்துவிட்ட இந்தியர்களை, இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்து கொள்வது என்று முன்பு வாக்களித்ததற்கு மாறாக இப்போது இந்திய அரசாங்கம் பதிவு செய்து கொள்ள மறுப்பதை மிகைபடக் கண்டித்திருக்கிறார்.

"இலங்கை அரசாங்கம், 1945-ல் நிறைவேற்றிய குடி உரிமைச் சட்டப்படி, உரிமை மறுக்கப்பட்ட இந்தியர்கள் இலங்கையில் வசித்தாலும், அவர்கள் இந்தியக் குடிமக்களாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றனர் என்கிற உண்மையை இந்திய அரசாங்கம் உணர்ந்திருக்க வேண்டும்; இலங்கை அரசாங்கம், யாரையும் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்கிற இலங்கைக் குடி உரிமைச் சட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டும்," என்று டட்லி சேனநாயகா குறிப்பிட்டிருக்கிறார்.

"நாங்கள் இப்போது, இலங்கையர்களுக்கு மட்டுமே வேலை தரமுடியும்; இந்தியர்களுக்கு இலங்கையில் வேலை தரமுடியாது,' என்று ஒரு சட்டம் இயற்றி, இந்தியர்கள் எல்லோரையும் வேலை இழக்கச் செய்வதாக வைத்துக் கொள்வோம்; அப்போதும் இந்திய அரசாங்கம், அவர்களை இந்தியர்களாகப் பதிவு செய்துகொள்ள மறுத்துவிடுமா? என்று, இந்தியத் தூதர் தேசாயை டட்லி சேனநாயகா கேட்டபோது, தேசாய் பதிலளித்ததாவது:—

"நிச்சயமாக மறுத்துவிடும், இந்த நிலையை இந்திய அரசாங்கம் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட்டது," என்றார்.

## ஆந்திர மந்திரி சபை மீது......

### நம்பிக்கையில்லாத் தீர்மானம்

ஆந்திர சட்டசபையின் கம்யூனிஸ்டு உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான நாகி ரெட்டி, ஆந்திர மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் ஒன்றை விவாதிக்க அனுமதி கோரி, சட்டசபைத் தலைவரின் காரியதரிசியிடம் கொடுத்துள்ளார்.

கடந்த மே 25-ல், சட்டசபை நிறைவேற்றிய தீர்மானப்படி, மதுவிலக்கிற்கான இராமமூர்த்தி குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்யவில்லை என்று அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தோழர் நாகி ரெட்டி, முதல் அமைச்சர் பிரகாசத்திற்கு, நம்பிக்கையில்லா தீர்மானத்தின் பிரதி ஒன்றை அனுப்பி, உடனே சட்டசபையைக் கூட்டுமாறும், சிறையில் உள்ள சட்டசபை உறுப்பினர்கள் உள்பட அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறும் கேட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

## இந்தியாவுக்கு எதிராக.........

### நிஜாம் பிரசாரம் செய்தார்!

"இந்தியாவுக்கு விரோதமான அறிக்கையை உலக பத்திரிகையில் நிஜாம் வெளியிட்டது உண்மையா?" என்று ஒரு உறுப்பினர் இந்திய மேல் சபையில் கேட்டபோது, 'ஆம்,' என்று உள்நாட்டு அமைச்சர் கட்ஜூ பதில் அளித்தார்.

ஹைதராபாத்தில் [illegible] போலீஸ் நடவடிக்கை [illegible] மேற்கண்ட [illegible] ஏற்பட்டது.

நேற்று டெல்லியிலிருந்து ஆசியாவின் கூட்டுறவுப் பொருளாதார அபிவிருத்திக்கான கொழும்புத் திட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஜப்பான் அழைக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

## கழகக்கூட்டங்கள்

★

### கல்வார்பட்டி

அருச்சுனன் திடலில்

17—9—54 இரவு 8 மணிக்கு

தலைவர்: அடிகளார் சிவநேசம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

ஆர். ஜனார்த்தனம்

பி. சமதர்மம்

கே. விக்கிரமாதித்தராசன்

மா. தங்கவேலர்

பன்னீர்செல்வன்

என். முத்து

எல். வீரராசன்

★

### சிவில்லிபுத்தூர்

17—9—54 வெள்ளி மாலை

தலைவர்: மா. குருசாமி

பேசுவோர்:

க. அன்பழகன்

எம் எஸ். இராமசாமி

### தி. மு. கழக துவக்க நாள்

17—9—54 மாலை 5 மணிக்கு சென்னை, அயன்புரம் 21-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில், தி. மு. கழக துவக்க நாள் கொண்டாடப்படும். கழகத் தோழர் பலர் பேசுவர்.

### திரு. வி. க. நினைவு விழா

17—9—54 மாலை 5 மணிக்கு சென்னை, அண்ணாபிள்ளைத் தெரு, பிரம்ம சமாஜ மண்டபத்தில், தாய்மார் கழகச் சார்பில், தோழியர் என். தருமாம்பாள் தலைமையில் திரு. வி. க. நினைவு விழா கொண்டாடப்பெறும். தோழியர் என். கிருஷ்ணவேணி திரு வி. க. படத்தைத் திறந்து வைத்துப் பேசுவார். தோழியர்கள் பத்மாவதி, பார்வதி, ஜோதிவதி, அலை அம்மாள், ஜெகதாம்பாள், மற்றும் பலர் பேசுவர்.

### ஆனந்த ரெங்காவுக்கு பாராட்டு விருந்து

சென்னை கொண்டித்தோப்பு வெங்கடேச மேஸ்திரி தெரு, 29 எண்ணுள்ள, திருமதி கனகநாராயண அம்மையார் இல்லத்தில் தோழர் ஆனந்த ரெங்கா அவர்கட்கு 8—9—54 பகல் 12-30 மணிக்கு ஒரு பாராட்டு விருந்து நடைபெற்றது. தோழர் ஆனந்த ரெங்கா அவர்கள் நரம்பு, எலும்பு தசை, ரத்த ஓட்டம் ஆகியவற்றால் நலிவுற்ற பிணியாளர்கட்கு உடற்பயிற்சி ஆசனம் ஆகிய முறைகளால் இயற்கை முறையில் குணம் பெற சிகிச்சைகள் செய்து அதில் சிறப்பெய்தி வருகிறார். திருமதி கனகநாராயண அம்மையார் அவர்கள் குழந்தை இராஜேந்திர பிரசாத் [illegible] இயற்கை சிகிச்சை மூலம் எழுந்து நடமாட [illegible] குணம் பெற்றிருக்கிறார். இத்தகைய [illegible] அனுப்பியிருக்க வேண்டும் [illegible] என்று விரைவில் செல்ல இருக்கிறார்கள். ஆகவே தோழர் ஆனந்த ரெங்கா அவர்களைப் பாராட்டி வழி அனுப்பிவைக்கும் உபசார விருந்துக்கு தோழர்கள் என். வி. நடராசன் தம்பதிகள், அ. பொன்னம்பலனார் ஆகிய பல தோழர்கள் கலந்துகொண்டு பாராட்டுரைகள் வழங்கினார்கள். பெரியார், அண்ணா ஆகியோர்கள் படங்கள் திறந்து வைக்கப்பட்டன. தோழர் ஆனந்த ரெங்கா அவர்கள் [illegible] இயற்கை வைத்திய முறை பற்றிய விளக்கங்களைக் கூறி, மக்கள் பணி செய்வதே தம் நோக்கம் என்றும் கூறினார். திருமதி கனகநாராயண அம்மையார் அவர்கள் தம் குழந்தையைக் கொண்டு மலர்மாலைகள் சூட்டி, நன்றி கூறினார்கள். எல்லோருக்கும் விருந்து நடைபெற்றது.

## ரஷ்யா உதவி

### இந்தியா வரவேற்கிறது

இந்தியாவில் உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்துவது சம்பந்தமாக ரஷ்யா அளிக்க முன் வந்துள்ள உதவியை இந்திய சர்க்கார் வரவேற்கிறார்கள் என்று தெரிகிறது.

நவம்பர் மாதத்தில், உருக்குத் தொழிற்சாலை நிபுணர்கள் குழுவை அனுப்புமாறு கேட்டிருக்கிறார்கள்.

ரஷ்யா உதவி அளிப்பதாகச் சொன்னதில், பிரச்சார தந்திரம் கலந்திருக்குமென்பது சர்க்காருக்குத் தெரியாமல் இல்லை; ஆனால் இதை வெறும் வியாபார விஷயமாகவே இந்திய சர்க்கார் மதிக்கிறார்கள்.

ரஷ்யா இந்தியாவுக்கு உதவி செய்கிறதென்பது மேல்நாடுகளில் சிலருக்குப் பிடிக்கவில்லையாம். இருந்தபோதிலும், 18 மாதங்களில் இந்தத் தொழிற்சாலையை ரஷ்யா முடித்துக் கொடுக்குமென்று தெரிந்தவுடன் இந்திய சர்க்கார் இப்பிரச்சினை மீது அதிகக் கவனம் செலுத்துகிறார்கள் என்று தெரிகிறது.

18 மாதங்களில் இந்தத் தொழிற்சாலை முடியுமென்றால், ஜெர்மன் கம்பெனி ஒன்று நிறுவிக் கட்டும் தொழிற்சாலை ஒன்று முடிவதற்கு முன்னரே ரஷ்ய நிபுணர்கள் கட்டி இருக்கும் தொழிற்சாலை வேலை ஆரம்பித்துவிடும் என்று தெரிகிறது.

## நெய்வேலி:

### 'தினமணி' கருத்து

"எது எப்படியாயினும், நமக்கு உருக்குத் தொழிற்சாலை அவசரமாகத் தேவை; அதை அமைப்பதில், 'ராஜீய லகான்' இல்லாமல் யார் துணை புரிந்தாலும் நாம் வரவேற்க வேண்டியதே; எனவே, இதன் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து திட்டமிட ஒரு நிபுணர் கோஷ்டியை அனுப்புமாறு இந்திய சர்க்கார் கேட்டிருப்பதை வரவேற்கிறோம். நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு, சேலம் ஜில்லாவிலுள்ள இரும்புச் சத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டத்தை, [illegible] பற்றியும் ரஷ்ய நிபுணர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று நாம் பலமாக வற்புறுத்துகிறோம்."

## தொழிற் கல்வி பயின்றும் பயன்படாத நிலை!

### 3,021 எஞ்சினியர்கள் 634 டாக்டர்கள் வேலையின்றி இருக்கின்றனராம்!

புதுடில்லி, செப். 13—

அக்டோபர் 1952-லிருந்து ஏப்ரல் 1954 வரை உள்ள இருவருட காலத்தில் 634 டாக்டர்களும், 3,021 எஞ்சினியர்களும் வேலை தேடித் தருமாறு கோரி, தங்கள் பெயர்களை வேலை தேடித்தரும் நிலையங்களில் பதிவு செய்திருக்கிறார்களாம்!

அதே காலத்தில் 90 டாக்டர்களுக்கும், 758 எஞ்சினியர்களுக்குமே அரசாங்கத்தால் வேலை தேடித்தர முடிந்திருக்கிறது.

இத்தகவல் 'ராஜ்ய சபை'யில் வெளியிடப்பட்டதாம்.

நாட்டில் போதுமான டாக்டர்கள் இல்லை என்ற கருத்து [illegible] அதனை டாக்டர்கள் வேலை தரப்படாதவர்களாக இருப்பது ஏன் என்று கேட்கப்பட்டபோது, "இருக்கிற வேலை டாக்டர்களுக்குப் பொருத்தமற்றவையாக, அல்லது அவர்களுக்கு அந்த வேலைகள் பிடிக்காதவையாகவோ இருக்கக்கூடும்" என்று பதிலளிக்கப்பட்டது.

## உங்களுக்குத் தெரியுமா?

★

1. மத்திய சமுதாய க்ஷேம நல போர்டு எதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது?

(அ) சமுதாய க்ஷேம நல ஸ்தாபனங்களின் தேவைகள் பற்றி ஆராய்வதற்காக;

(ஆ) மானியத் தொகைகள் அளிக்கப்படுவதற்கு அருகதையுள்ள ஸ்தாபனங்களை நிர்ணயித்து, அவற்றிற்கு மானியத் தொகைகள் வழங்கி வருவதற்காக;

(இ) சர்க்கார் உதவி பெற்று நடத்தப்பட்டு வரும் ஸ்தாபனங்களின் வேலைத் திட்டங்களையும், அபிவிருத்தித் திட்டங்களையும் மதிப்பிடுவதற்காக.

2. ஆசியாவிலேயே மிகப் பெரியதான சிந்திரி ரசாயன உர உற்பத்திச் சாலையில் அம்மோனியம் சல்பேட் எத்தனை டன் உற்பத்தி செய்ய முடியும்?

(அ) நாளொன்றுக்கு ஆயிரம் டன்;

(ஆ) வாரம் ஒன்றுக்கு ஆயிரம் டன்;

(இ) இரண்டு வாரத்துக்கு ஆயிரம் டன்.

3. இந்தியாவின் அபிவிருத்தித் திட்டத்திற்குப் பொது மக்கள் நிதி உதவ வசதி செய்யும் பொருட்டு, 1954 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட தேசியத் திட்டக் கடனுக்கு நிதி திரட்டுவது எந்தத் தேதியுடன் நிறுத்திக் கொள்ளப்படும்?

(அ) 1954 செப்டம்பர் 16-ந் தேதி;

(ஆ) 1954 அக்டோபர் 2-ந் தேதி;

(இ) 1954 டிசம்பர் 23-ந் தேதி.

4 சுமார் 12 கோடி ரூபாய் செலவில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய துறைமுகம் எந்த இடத்தில் உள்ளது?

(அ) விசாகப்பட்டணம்;

(ஆ) டிராம்பே;

(இ) காண்ட்லா.

5. மொத்தம் சுமார் 10 லட்சம் கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்ய முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது; இந்த லட்சிய அளவில் இதுவரை எவ்வளவு சாத்தியமாகியுள்ளது?

(அ) இரண்டில் ஒரு பங்கு;

(ஆ) மூன்றில் ஒரு பங்கு;

(இ) நான்கில் ஒரு பங்கு.

விடைகள்: 1-(எல்லா விடைகளும் சரி); 2-(அ); 3-(ஆ); 4-(இ); 5-(அ).

## 'கலப்படம் களையப்பட!'

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுக்க வகை செய்யும் மசோதா மக்கள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேல் சபையில் விவாதிக்கப்படுகையில், உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் மத்திய உணவு மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌர் குறிப்பிட்டதாவது:—

"நிலவுகிற நிலைமைகளை, நாட்டிலிருந்து அகற்ற, சட்டங்கள் மட்டும் செய்யப்பட்டால் போதாது என்பதை நான் உணர்கிறேன்; எனவே, இந்தச் சபையில் உள்ள எல்லா உறுப்பினர்களுடையவும், நாட்டு மக்கள் எல்லோருடையவும் ஒன்றுபட்ட ஒத்துழைப்பு, உணவுப் பொருளில் கலப்படம் செய்வதைத் தடுக்கும் பிரச்னையில் தேவை என்று கோருகிறேன்."

சென்னை [illegible] நம்நாடு அச்சகத்தில் தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்கள் அச்சிட்டு [illegible] (இல. [illegible] நாராயண [illegible] தெரு, இராயபுரம்) வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.